கோவிட்-19 தடுப்பூசி

# உண்மைகளைப் பெறுங்கள்.

## தடுப்பூசி பெற்ற பின்னர் பாதுகாப்பாக இருங்கள். உங்கள் சமூகத்தைப் பாதுகாருங்கள்.



**உங்களது இறுதி ஊசியின் பின்னர் இரு கிழமைகள் வரை நீங்கள் கோவிட்-19 இலிருந்து முற்றிலும் பாதுகாக்கப்படுவதில்லை.**




- நீங்கள் **ஈருசித் தடுப்பூசியைப்** பெற்றிருந்தால், நீங்கள் உங்களது இரண்டாம் ஊசியிலிருந்து **2 கிழமைகள்** வரை காத்திருந்தாக வேண்டும்.
- நீங்கள் **ஒரு ஊசி** மாத்திரம் தேவைப்படும் தடுப்பூசியைப் பெற்றிருந்தால், நீங்கள் உங்களது ஊசி செலுத்தலின் பின்னர் **2 கிழமைகள்** வரை காத்திருந்தாக வேண்டும்.

## தடுப்பூசி பெற்ற பின்னர் பாதுகாப்பாக இருங்கள்

நிபுணர்கள் தடுப்பூசி கோவிட்-19 இலிருந்து உங்களை எவ்வளவு காலம் பாதுகாக்கும் என்பதையோ தடுப்பூசி பெற்ற பின்னரும் உங்களிடமிருந்து ஏனையோருக்குக் கோவிட்-19 பரவலாமா என்பதையோ அறியவில்லை. தடுப்பூசி பெற்ற பின்னரும் இவற்றைத் தொடருங்கள்:



ஒரு முகமூடியை அணிதல்.



சமூக இடைவெளியைப் பழகுதல்.



பலருடன் ஒன்று சேர்வதைத் தவிருங்கள்.



உங்களது கைகளை அடிக்கடி கழுவுங்கள்.



அதிகமாகத் தொடப்படும் பகுதிகளைத் தொற்று நீக்குங்கள்

**நீங்கள் முழுமையாகத் தடுப்பூசி செலுத்தப்பட்டிருந்தாலும், பின்வரும் நிலைகளில் கோவிட்-19 உள்ளதா என்று உடனடியாகச் சோதித்துக் கொள்ளுங்கள்:**



**நீங்கள் கோவிட்-19 உள்ள ஒருவருக்கு அருகில் இருந்ததுடன் சுகவீனமாக உணரத் தொடங்குகிறீர்கள்.** வீட்டில் தங்கியிருந்து ஏனையோருடன் விலகி நிற்கவும் செய்யுங்கள்.

**நீங்கள் பலருடன் வசிக்கிறீர்கள்,** அத்துடன் **கோவிட்-19 உள்ள ஒருவருக்கு அருகில் இருந்துள்ளீர்கள். நீங்கள் சுகவீனமடையாத போதிலும், சோதித்துக் கொள்ளுங்கள்.** வீட்டில் தங்கியிருந்து ஏனையோருடன் விலகி நிற்கவும் செய்யுங்கள்.

NRC-RIM
National Resource Center for Refugees, Immigrants, and Migrants

இன்னும் தகவல்களுக்கு: cdc.gov/coronavirus